செ.வெ.எண்:52 நாள்: 18.08.2017

ந.க.எண்.சி3/27081/2017

மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
திருநெல்வேலி,
நாள்: 18 .08.2017

# பத்திரிக்கை செய்தி

திருநெல்வேலி வருவாய் மாவட்டம், தென்காசி கோட்டம், சிவகிரி வட்டம், நெல்கட்டும் செவல் கிராமம், நெல்கட்டும் செவல் மஜரா பச்சேரியில் ஒண்டிவீரன் நினைவு நாள் 20.08.2017 அன்றும், பூலித்தேவன் பிறந்த நாள் 01.09.2017 அன்றும் கொண்டாட இருப்பதையொட்டி சட்டம் ஒழுங்கு மற்றும் பொது அமைதியைப் பேணும் பொருட்டு 19.08.2017 அன்று காலை 06.00 மணி முதல் 02.09.2017 அன்று காலை 06.00 மணி வரை 15 நாட்களுக்கு மேற்படி பகுதிகளில் 5 அல்லது அத்றகு மேற்பட்ட நபர்கள் கூட்டமாக கூடுவதற்கும், வாள்,கத்தி,லத்தி,கற்கள் போன்ற ஆயுதங்களுடன் ஊர்வலம் செல்வதற்கும், மாவட்ட நிர்வாகத்திடம் உரிய அனுமதியின்றி அன்னதானம் வழங்குவதற்கும், பால்குடம், முளைப்பாரி போன்றவற்றுடன் ஊர்வலம் செல்வதற்கும், இவ்வழியே வாடிக்கையாக நின்று செல்லும் வாகனங்கள், வேறு இடங்களுக்குச் செல்லும் சுற்றுலா வாகனங்கள், சரக்கு வாகனங்கள், மாணவ மாணவியரை பள்ளி / கல்லூரிகளுக்கு ஏற்றிச் செல்லும் வாகனங்கள், அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் வழக்கமாக செல்லும் ஆம்னி பஸ் ஆகியவை தவிர்த்து இதர வாகனங்கள் குறிப்பாக ஒண்டி வீரன் நினைவு தினம் மற்றும் பூலித்தேவன் பிறந்த தினம் ஆகியவற்றிற்கு வரும் விருப்பார்வத் தொண்டர்களை ஏற்றி வரும் வாகனங்கள் ஆகியவை திருநெல்வேலி மாவட்ட எல்லைக்குள் நுழையவும் தடை விதித்து திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் குற்றவியல் விசாரணை நடைமுறை சட்டம் பிரிவு 144 (1), (2) -ன் கீழ் உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட ஆட்சித் தலைவருக்காக
திருநெல்வேலி

18/8/17

வெளியீடு
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்
திருநெல்வேலி